**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–1

O.S.No.350/2023

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. சங்கர் | வயது:30 |
| த/பெ. : திரு. பழனிசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர் இல்லை. பிரதிவாதி ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் பிரதிவாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 08.03.2019 – பிரதிவாதிக்கும், செல்வராணிக்கும் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் எண். 1206/2010 | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 1** |
| 07.02.2020 – பிரதிவாதிக்கும், செல்வராணிக்கும் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் எண். 579/2020 | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 2** |
| 07.02.2020 – பிரதிவாதிக்கும், செல்வராணிக்கும் இடையே ஏற்பட்டபதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் எண். 578/2020 | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 3** |
| 30.09.2025 – 1.1.2020 முதல் 29.09.2025 வரை உள்ள வில்லங்க சான்றிதழ் | அசல் | **பி.வா.சா.ஆ 4** |

| | | |
|---|---|---|
| 13.02.2024 – திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.351/2023 ல் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை(இந்த ஆவணத்திற்கும் தாவாவிற்கும் சம்பந்தமில்லை என்று ஆட்பேனை செய்யப்பட்டது) | நகல் | **பி.வா.சா.ஆ 5** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.11 16:00:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.